**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KALASAPAKKAM.**

| | | | |
|---|---|---|---|
| Calender Deposition of witness for Name | : Nagalingam | Case No. | : S.T.C.315/2025 U/s 138 of N.I.Act |
| Father/Husband Name | : Parasuraman | Witness No. | : PW1 cross |
| Profession | : Farmer | Village | : Sozhavaram |
| Age | : 47 | Taluk & District | : Kalasapakkam tk., Tvm dt. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.08.2026.

**Accused present.**

**Starting time : 12.39 p.m.**

**குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் +2 படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் 2024 ல் எங்கு வேலை செய்தேன் என்றால் விவசாயம் பார்த்தேன். எனது மனைவி பெயர் என்ன என்றால் சுகந்தி. எனது மனைவி சோழவரம் கிராமத்தில் ஊரக வாழ்வாதார திட்டம், அலுவலக பதிவுகள் பராமரிப்பாளராக பணிபுரிகிறார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனக்கு தெரியும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல, நான் உண்மையைதான் சொல்கிறேன். மனைவியின் தம்பி வில்வாரணி இந்தியன் வங்கி அருகே இ-சேவை மையம் வைத்துள்ளார் என்றால் வேலை செய்கிறார் என்று தெரியும் , அவர் முதலாளியா என்பது பற்றி தெரியாது. எனது மனைவி ஓம் சக்தி மகளிர் குழுவில் பொறுப்பாளராக உள்ளார் என்றால் இல்லை. அவர் தான் மகளிர் குழுவின் தலைவர் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல, நான் உண்மையை தான் சொல்கிறேன். எதிர்மனுதாரரின் மனைவி உண்ணாமலை

மேற்படி ஓம் சக்தி மகளிர் குழுவில் கடனாக ரூ.1லட்சம் அவரது வங்கி கணக்கு எண் 835529558 ல் கடந்த 01.08.2024 அன்று பெற்றதை எனது மனைவி முறைகேடாக கையொப்பம் செய்து பெற்றுள்ளார் என எனது மனைவி மீதும், வில்வாரணி இந்தியன் வங்கி மேலாளர் மீதும் ஆன்லைன் எண் EAU24407688 மூலமாக புகார் பதியப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இந்த புகாரின் விசாரணையின் மீது நானும், எனது மனைவியும், மேற்படி வங்கி மேலாளரும் அந்த கடன் தொகையை உண்ணாமலை வங்கி கணக்கில் நாங்களே செலுத்தினோம் என்றால் இல்லை, நான் செல்லவில்லை. அந்த புகார் இன்று வரை நிலுவையில் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞர் அளித்த அறிவிப்பு மற்றும் அதில் உள்ள விவரங்கள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த அறிவிப்பில் எந்த இடத்தில், எந்த நேரத்தில், யார் முன்னிலையில் கொடுத்தேன் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.ரூ.3 லட்சம் பணத்தை பணமாக கொடுத்தேனா அல்லது வங்கி கணக்கு வாயிலாக கொடுத்தேனா என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன். தற்சமயம் சாட்சியிடம் அறிவிப்பினை காண்பித்து அந்த வாசகம் எங்கு உள்ளது என்று கேட்டதற்கு சாட்சி அறிவிப்பினை படித்துவிட்டு சரிதான் என்று கூறுகிறார். நான் உண்மையில் எதிர்மனுதாரருக்கு பணம் கொடுத்திருந்தால் எந்த தேதியில், எந்த இடத்தில், யார் முன்னிலையில் கடன் தொகையை கொடுத்தேன் என்பதை எனது அறிவிப்பிலோ, மனுவிலோ அல்லது விசாரணை வாக்குமூலத்திலோ குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரியின் மனைவி 01.08.2024 முதலே எனது மனைவி மீது புகார் கொடுத்துவிட்டதால் எனக்கும் எதிரிக்கும் பேச்சு வார்த்தைக்கு வாய்ப்பேயில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது மனைவி ஓம் சக்தி குழு கடன் தொகையில் செய்த முறைகேடு பற்றி கொடுத்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காக அவர் ஓம் சக்தி குழுவில் கொடுத்த காசோலையை இவ்வழக்கில் சமர்ப்பித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் கொடுத்த கடனுக்காக எதிர்மனுதாரர் அந்த காசோலையை எனக்கு வழங்கினார். எனக்கு எந்த எந்த

வங்கியில், கிளையில் கணக்கு உள்ளது என்றால் 1. தென்மாதிமங்கலம் கிளை பெட்ரல் வங்கி, 2. மேலாரணி கிளை இந்தியன் வங்கி தற்சமயம் இந்த இரண்டு மட்டுமே உள்ளது. எதை எப்போது துவங்கினேன் என்றால் 1. மேலாரணி கிளை இந்தியன்வங்கி 10 வருடங்களுக்கு முன்பு துவங்கிவிட்டேன் 2. தென்மாதிமங்கலம் கிளை பெட்ரல் வங்கி 2 வருடங்களாக துவங்கி பயன்படுத்தி வருகிறேன். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு 1 மாதம் முன்பு தென்மாதிமங்கலம் கிளை பெட்ரல் வங்கி கணக்கு துவங்கி அதே வங்கி வாயிலாக காசோலை செலுத்தி திருப்பப்பட்டது என்றால் சரிதான். மேலாரணி கிளை இந்தியன் வங்கி கிளை மேலாளர் மற்றும் எனது மனைவி மீது புகார் உள்ள காரணத்தால் நான் புதிய வங்கி வாயிலாக காசோலையை வசூலுக்கு செலுத்தினேன் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேலாரணி கிளை இந்தியன் வங்கி கணக்கில் கடந்த 10 வருடங்களாக எனது வரவு செலவு கணக்குகளை பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். காசோலை நிரப்பப்பட்டு வழங்கப்பட்டதா அல்லது நிரப்பாமல் வழங்கப்பட்டதா என்றால் நிரப்பிதான் வழங்கினார். எதிரிக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியாது என்றால் சாட்சி சரிதான் என்று கூறிவிட்டு பின்னர் அதை பற்றி எனக்கு தெரியாது என்று கூறுகிறார். எதிரி என்னிடம் வழங்கிய காசோலையை யார் வாயிலாக நிரப்பினார் என்ற விவரத்தை நான் கேட்கவில்லை என்றால் சரிதான். தற்சமயம் ம.சா.ஆ.1 னை காண்பித்து அதில் உள்ள கையொப்பம் மற்றும் தொகை நிரப்பிய பேனாவின் மை வேறுபாடுள்ளது என்று கேட்டதற்கு - அவ்வாறு வேறுபாடு எதுவும் எனக்கு தெரியவில்லை என்று சாட்சி கூறுகிறார். எனக்கு வேறுபாடு தெரிந்தே, அதில் தொகை, தேதி, நான் தான் நிரப்பினேன் என்பதால் தெரியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல, நான் நிரப்பவும் இல்லை. நான் எந்த தேதியில் காசோலையை செலுத்தினேன் அந்த எந்த தேதியில் திருப்பப்பட்டது என்றால் 10.10.2024 அன்று செலுத்தினேன், 15.10.2024 அன்று போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டது. மேற்படி திருப்பப்பட்டது குறித்து நான் எதிரியிடம் நேரடியாக கேட்கவில்லை என்றால் சரியல்ல, நான் கேட்டேன். யாரை வைத்துகொண்டு கேட்டேன் என்றால் எனது உறவினர்

என்பதால் யாரை வைத்தும் கேட்கவில்லை நானே நேரடியாக கேட்டேன். அந்த சங்கதியை எனது மனுவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் என்று கூறியதற்கு அந்த சாட்சியின் பிரமாண வாக்குமூலம் மற்றும் மனுவினை பார்த்து எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்று கேட்டதற்கு ஆங்கிலம் படிக்க வரும் ஆனால் அதன் அர்த்தத்தை புரிந்துகொள்ள இயலாது என்று கூறுகிறார். பின்னர் இம்மனுவின் சட்ட அறிவிப்பு மற்றும் பிரமாண வாக்குமூலம் காண்பித்து அதில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதா என்று கேட்டதற்கு இல்லை, குறிப்பிடவில்லை என்று கூறிவிட்டு பின்னர் தவறுதலாக விடுபட்டிருக்கலாம் என்று கூறுகிறார். எனக்கு தமிழ் நன்றாக படிக்க எழுத தெரியுமா என்றால் தெரியும். இம்மனுவின் சட்ட அறிவிப்பு, பிரமாண வாக்குமூலம் நான் நன்கு படித்து பார்த்து பின்னர் கையொப்பம் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் பிரமாண வாக்குமூலம் மற்றும் அறிவிப்பை படித்த பிறகு கையொப்பம் செய்துள்ளேன் என்றால் அதில் விடுபட்டுள்ள விவரமும் தெரிந்தே கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான், ஆனால் நான் அந்த தகவலை சேர்த்துக்க சொல்லி வழக்கறிஞரிடம் சொன்னேன். இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள அறிவிப்பு, மனு மற்றும் பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் உள்ள தகவல் பற்றி எனக்கு தெரியாது என்றாலும் எனது வழக்கறிஞர் வழக்கிற்காக தயார் செய்த ஆவணங்களில் மட்டும் நான் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல, நான் சொன்னதை வைத்து தான் வழக்கறிஞர் தயார் செய்தார். நான் உண்மையில் அவ்வாறு சொல்லியிருந்தால் விடுபட்டதாக சொல்லப்படும் விவரத்தை எனது வழக்கறிஞரிடம் சொல்லியிருப்பேன் அவரும் அதை சேர்த்திருப்பார் என்றாலும் நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. எனக்கு ரூ. 3 லட்சம் எப்படி வந்தது என்றால் எதிர்மனுதாரர் அவசரமாக வேண்டும் என கேட்டதால் நண்பரிடமும், உறவினரிடமும் வாங்கி கொடுத்தேன். நண்பரிடமும் உறவினரிடமும் எதிரிக்கு கொடுக்க வேண்டி தான் வாங்கினேன் என தெரிவித்தேன் என்றால்

சரிதான். மேற்படி எந்த எந்த நண்பர், எந்த எந்த உறவினர் எவ்வளவு தொகை வாங்கி கொடுத்தேன் என்ற விவரத்தை வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் உண்மையில் அவ்வாறு வாங்கி கொடுத்தியிருந்தால் மனுவில் சொல்லியிருப்பேன் நான் அவ்வாறு வாங்கவில்லை என்பதால் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, நான் வாங்கிதான் கொடுத்தேன். எவ்வளவு நிலம் உள்ளது என்றால் 1 ஏக்கர் 25 சென்ட் நிலம் உள்ளது. நானும் எனது மனைவியும் விவசாயத்தை நம்பி தான் உள்ளோம் என்றால் நான் விவசாயம் செய்கிறேன் எனது மனைவி என்ன வேலை செய்கிறார் என்று தெரியாது. எனது மனைவி என்னுடன் ஒரே வீட்டில் வாழ்கிறார் என்றால் சரிதான். எதிரிக்கும் எனக்கும் எந்த உறவும் இல்லை என்றால் சரியல்ல, அவர் எனக்கு உறவினர் தான். ஓம் சக்தி குழுவில் நடந்த முறைகேடு, புகாருக்கு பழி வாங்க இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கொடுத்த காசோலையின் எண் என்ன என்றால் 198643 ஆகும். காசோலையை நான் பார்த்துதான் வாங்கினேன் என்றால் சரிதான். சாட்சியிடம் காசோலையை காண்பித்து அதில் உள்ள எதிரியின் வங்கி கணக்கு எண் என்ன என்றால் தொடக்க எண் 5911 என்று தெரியும், அதற்காக தான் அந்த காசோலையை அசலாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 01.10.2024 அன்று காசோலை வழங்கும்போது எவ்வளவு நாட்களில் கடனை திருப்பி தருவதாக கூறி வழங்கினார் என்றால் 1 வாரத்தில் வழங்குவதாக கூறினார். இந்த விவரத்தை அறிவிப்பிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்று மேற்படி இரு ஆவணங்களை சாட்சியிடம் கொடுத்ததற்கு அதனை படித்து விட்டு தற்சமயம் அதில் இல்லை அது கவனக்குறைவாக விடுபட்டிருக்கலாம் என்று கூறுகிறார். 01.10.2024 அன்று கடன் பெறும்போது 1 வாரத்தில் கடனை திருப்பி அடைப்பதாக கூறிய நிலையில் 10.10.2024 அன்று ஏன் தாமதமான தேதி குறிப்பிட்ட காசோலையை வாங்கினேன் என்றால் உறவினர் என்பதால் 3 நாட்களுக்கு முன்பாக பணம் வரலாம் வராமலும் போகலாம் அதை பொருத்து 10 தேதிக்கு மேல் செலுத்த வேண்டுக்கோள் இட்டதன் பேரில் 10.10.2024 தேதியிட்ட காசோலையை பெற்றேன். நான் பணம்

கொடுத்த விவரம் என் மனைவிக்கு தெரியாது என்றால் சரிதான். நான்எதிர்மனுதாரரிடம் கொடுத்த கடனை எந்த எந்த நண்பர், உறவினரிடம் பெற்றேனோ அவர்கள் நான் அழைத்தால் சாட்சியம் அளிக்க வருவார்கள் என்றால் சரிதான்.

**(எதிர்மனுதாரரின் வேண்டுகோளுக்கிணங்க செலவு தொகை ரூபாய் 1000/- மனுதாரருக்கு கொடுக்க அதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒம்/- நாகலிங்கம்

**Ending time : 02.04 p.m.**

Taken down by me in open court and read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Sd/- B.Udhayakumar
District Munsif cum
Judicial Magistrate,
Kalasapakkam.